அ.வ.எண்.60/2019

பெயர் – சோலைச்சாமி (வா.சா.1)

நாள் – 06.07.2022

<u>3ம் பிரதிவாதி தரப்பில் கு.வி</u>

இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி இந்திரகுமாரி எனது மனைவி என்றால் சரிதான். எனது மனைவியை எதற்காக இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன் என்றால் பொது குடும்ப பிரச்சனையாகவும் சொந்த பந்தங்களுக்குள் பிரச்சனையாகவும் இருப்பதால் ஏன் இந்த வழக்கு என்று எனது மனைவி கேட்டதால் இந்தவழக்கில் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகு எனக்கும் எனது மனைவிக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சிறுசிறு பிரச்சனைகள் உள்ளது. தற்போதும் நானும் எனது மனைவியும் ஒரே வீட்டில் தான் உள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனது மனைவிக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான்.